# சமாதான முயற்சிகளை அரசு புறக்கணிக்கலாம்

## — பி. பி. ஸி. கூறுகிறது

பொதுசன நூலகம் மாநகராட்சி மன்றம் 31-1-1994 யாழ்ப்பாணம்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 18 இதழ் 349
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 31-1-1994

(கொழும்பு)
இலங்கையில் தொடரும் பிரச்னைக்கு சுமுகமான தீர்வொன்றை காணவும் இந்த யுத்தத்தை முடிவுக்குகொண்டு வரவும் ஏதாவது சமாதான முயற்சிக்கு இலங்கை அரசு தற்போது வருமா என்பது சந்தேகமாகவே உள்ளது என பி.பி.ஸி. தெரிவித்துள்ளது.

அண்மைக்காலமாக அரசு பாரிய யுத்தம் ஒன்றுக்கு தயாராகி வருவதால் எந்த

(4-ம் பக்கம் பார்க்க)

## யுத்த நிறுத்தம் பற்றி புலிகளுடன் பேசினேன்

### — ஆயர் தெரிவிப்பு

(கொழும்பு)
வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு தீர்வுகாணும் முன்னோடி நடவடிக்கையாக அரசும் விடுதலைப்புலிகளும் யுத்தநிறுத்தம் மேற்கொள்வதன் அவசியம் குறித்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தியதாக அண்மையில் யாழ்ப்பாணம் வந்து கொழும்பு திரும்பிய கத்தோலிக்க திருச்சபையின் அதி மேற்றிராணியார் வண. நீக்கிலஸ் மார்க்கஸ் பெர்

(4-ம் பக்கம் பார்க்க)

★ சிங்கள இனவாதம் தொடர்வதால்

# வடக்கு கிழக்கில் பல ஆண்டு காலத்திற்கு

# யுத்தம் தொடரும் அபாயம்

## பி. பி. ஸி. விமர்சனம்

(லண்டன்)
இலங்கையில் சிறுபான்மையினரின் நலனைப் புறக்கணித்து சிங்கள தேசியவாதம் சட்டபூர்வமான அரசியல் செலாவணியாக ஆகிவிட்டால் நாட்டில் வடக்கு - கிழக்கில் நடக்கும் போர் இன்னும் பல ஆண்டுகளுக்கு தொடரும் அபாயம் ஏற்படும் என பி. பி. ஸி' செய்தி விமர்சனம் ஒன்றில் தெரிவித்துள்ளது'

சிங்கள தேசிய வாதம் ஓர் அரசியல் சக்தியாக மீண்டும் வெளிப்படுகிறது. என பி. பி. ஸி.யின் விசேட நிருபர் கலபண ஐசாக் எழுதிய ஆய்வுரைக் கண்ணோட்டம் மேலும் கூறுகையில்: 1980ம் ஆண்டுகள் வரையும் பெரும் வாக்காளர் கூட்டத்தை கவர இங்கள தேசியவாதமே] முக்கியமாக கருதப்பட்டு வந்தது. இலங்கையின் மொத்தசனத்தொகையில் முக்கால்பங்கினர் சிங்களவர். இனவாதமற்ற அரசியல்

(2-ம் பக்கம் பார்க்க)

## காணாமல் போனோர்க்கு மரணச் சான்றிதழ்

(கொழும்பு)
காணாமற்போனவர்களுக்கு, மரணமடைந்தவர்களுக்கும் மரணப் பதிவுச் சான்றிதழ்களை வழங்குவதற்கு இடமளிக்கும் வகையில் புதிய சட்டத் திருத்தம் நாடாளுமன்றில் கொண்டுவரப்படவுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

## தேர்தல் கடமையில் 5000 பொலிஸார்

(கொழும்பு)
கிழக்கிலும் வவுனியாவிலும் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலின்போது 5000 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக பொலிஸா

(4ம் பக்கம் பார்க்க)

## 14 புதிய பட்டாலியன்களும் விரைவில் யுத்தமுனைக்கு வரும்

(கொழும்பு)
இராணுவ தலைமைப்பீடம் திட்டமிட்டுள்ளவாறு 14 000 படையினரைக் கொண்ட 14 புதிய பட்டாலியன்களும் விரைவில் யுத்தமுனைக்கு வரவுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

500க்கும் மேற்பட்ட அதிகாரிகள் தரத்திலானவர்களை கொண்டிருக்கும் இப்புதிய 14 பட்டாலியன்களும் யுத்த முனையில் தேவைக்கேற்ப அனுப்பப்படவுள்ளனவாம்.

(4ம் பக்கம் பார்க்க)

## ஐ.ஐ.தே.மு. புதிய தலைவராக பிரேமச்சந்திரா தெரிவு

(கொழும்பு)
ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் புதிய தலைவராக ஜி. எம். பிரேமச்சந்திரா தெரிவாகியுள்ளார். நேற்று நடந்த ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் நடவடிக்கை குழுக்கூட்டத்தில் வேயே மேற்படி தெரிவு நடைபெற்றது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவராக இருந்த ஏ. வி குலரத்னாவின் இடத்துக்கு பி. வி. கலுகல்ல நியமிக்கப்பட்டுள்ளார். மற்றும் பல உத்தியோகத்தர்கள் தெரிவும் இடம்பெற்றது.

(4ம் பக்கம் பார்க்க)

## விசேட படையணி உருவாக்க அரசு தீவிரமாக ஆட்சேர்ப்பு!

(கொழும்பு)
சிறிலங்கா இராணுவத்தினர் விசேட படையணி ஒன்றை உருவாக்கிவருகின்றனர். இதற்கான ஆட்சேர்ப்பு தென்னிலங்கையின் பலபகுதிகளிலும் நடைபெற்று வருகிறது.

இப்படையணியில் சேர விரும்புவோருக்கான நேர்முகப் பரீட்சை, கடந்த திங்கட்கிழமை முதல் நடைபெற்று வருகிறது. கொழும்பு, அநுராதபுரம், கண்டி, காலி ஆகிய இடங்களில் இந்த நேர்முகப் பரீட்சை பெப்ரவரி 10ம் திகதி வரை நடைபெறவுள்ளதாம்.

இவ்விசேட படையணியில் சேர்வோருக்கு மாதச் சம்பளமாக 3,300 ரூபா வழங்கப்

(4ம் பக்கம் பார்க்க)

## பிரேமாவின் ஆட்சியை காமினி சாடுகிறார்

(கொழும்பு)
பிரேமதாசா ஜனாதிபதியாக இருந்த காலத்தில் நாடாளுமன்றத்துக்குரிய உரிமைகள், அமைச்சரவைக்குரிய நடவடிக்கைகள் எல்லாம் பாதிக்கப்பட்டன என்று காமினி திசநாயக்கா பி. பி. ஸி. சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், ஜனாதிபதி பிரேமதாசாவும்

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு உதவ வேண்டாம் பாகிஸ்தானுக்கு எச்சரிக்கை?

### அமெரிக்கா, பிரிட்டன் விடுத்ததாம்

(புதுடில்லி)
தென்னிந்தியாவில் சீர்குலைவை ஏற்படுத்தும் முயற்சியாக இலங்கை தமிழ் போராளி அமைப்பான விடுதலைப் புலிகள் இயக்கத்தை பயன்படுத்த வேண்டாம் என அமெரிக்காவும் பிரிட்டனும் பாகிஸ்தானை எச்சரித்துள்ளதாக யு. என். ஐ. செய்தி வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தானுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தொடர்புகள் அதிகரித்து வருவதாக தகவல்கள் வந்துள்ளதையடுத்தே இத்தகைய எச்சரிக்கை விடுக்கப்பட்டு

(4-ம் பக்கம் பார்க்க)

## அரசின் முழுக் கவனமும் கிழக்கு தேர்தலில்

(கொழும்பு)
கிழக்கில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலிலேயே அரசின் முழுக்கவனமும் செலுத்தப் பட்டிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்காக பெருமளவு அரச அதிகாரிகள் உட்பட அரசின் பல வளங்களும் கிழக்கிற்கு அனுப்பப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கின் பாதுகாப்பைமுழு

(4-ம் பக்கம் பார்க்க)

மணிவாக்கு

எல்லா மனிதர்களுடைய இன்பமோ, துன்பமோ திருமணத்தைப் பொறுத்திருக்கிறது.

—பைரன்

# வெளிநாடுகளில் தொழில்புரிவோரால் இலங்கைக்கு 300 கோடி ரூபா நாணய மாற்று கிடைக்கிறது

(கொழும்பு)

வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்களால் 300 கோடி ரூபா வெளிநாட்டு நாணயமாற்று கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவ்வருடம் 400 கோடி ரூபா வரை வெளிநாட்டு நாணயமாற்று அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

சுமார் ஐந்து லட்சத்திற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் தற்போது வெளிநாடுகளில் தொழில் புரிந்து வருகிறார்கள்.

வெளிநாட்டு நாணய மாற்றை அதிகரிக்கச் செய்யும் நோக்குடன் வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு பெற விரும்பும் இலங்கையருக்கு சகல வசதிகளும் செய்து கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வாரந்தோறும் 50 இலங்கையரை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் வெளிநாடுகளில் தொழில்புரிவோரின் நன்மை கருதி மாசி மாதத்தில் நிதியம் ஒன்றும் ஆரம்பிக்கப்படவுள்ளது. மேலும் தாயகம் திரும்புவோருக்கும் வெளிநாடுகளுக்கு செல்வோருக்கும் என கட்டுநாயகா விமானநிலையத்தில் தங்குமிட வசதிகளும் செய்து கொடுக்கப்படவுள்ளது.- ரி

## நமது நோக்கு

### ஏரோதின் நீதியா?

ஏரோது மன்னன், தனது வீழ்ச்சிக்கு வழி வகுக்கக் கூடிய பிள்ளை ஒன்று பிறக்குமெனக் கேள்விப்பட்டான். அக்குழந்தையைக் கொலைத் தீர்மானித்தான்.

ஆனால் தாயும் குழந்தையும் வேறு நாட்டிற்குத் தப்பி விட்டார்கள்.

ஆத்திரமுற்ற கொடுங்கோலன் என்ன செய்தான்? பெத்லகேமிலும் நகரில் உள்ள இரண்டு வயதிற்குட்பட்ட குழந்தைகள் அனைத்தையுமே கொல்லும்படி கட்டளை இட்டான்.

இது பைபிள் கதை. ஏரோதின் கொடுங்கோல் நீதியா இங்கு நடைமுறைப்படுத்தப்படுகின்றது என ரேணுகா சேனநாயக்கா கேள்வி எழுப்பியுள்ளார் 'சண்டே டைம்ஸ்' வார ஏட்டில்!

போராளிகளைக் கண்டு பிடித்து நசுக்க வேண்டுமென்பதற்காக, தமிழ்ப் பொதுமக்கள் அத்தனை பேரையும் சந்தேகப் பிராணிகளாக்கி, சுற்றி வளைப்புகள், கூட்டாகக் கைதுசெய்தல், தடுத்து வைத்தல் போன்ற சம்பவங்கள் கொழும்பில் இடம்பெறும் நாளாந்த நடவடிக்கைகளைக் கண்டித்திருக்கிறார் கட்டுரையாளர்.

ஒரு முறை கைது செய்யப்பட்டு, விசாரிக்கப்பட்டு வெளியே வந்தவர்கள் கூட மீண்டும் மீண்டும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதற்கான உதாரணங்களும் தரப்பட்டுள்ளன.

மனித உரிமைக் குழுக்களின் வேண்டுகோள்கள் பல அரசினால் ஏற்கப்பட்டன. ஆனால் அவை பொலிசாரினால் மீறப்பட்டே வருகின்றன.

மன்னிப்புச் சபை வேண்டுகோளின்படி, ஒருவரைக் கைது செய்தால் அவரின் நெருங்கிய உறவினருக்கு அது பற்றித் தெரிவிக்க வேண்டும். இதனை அரசு ஏற்றிருந்தது. ஆனால் யதார்த்த நிலை என்ன? அப்படித் தெரிவிக்கப்படவில்லை.

இதுபற்றி அதிகாரிகளை விசாரித்த போது, தூர இடங்களில் கைதுசெய்து கொண்டு வருபவர்களுக்குத்தான் இந்த விதிமுறை என்ற புது விளக்கம் தரப்படுகின்றது; மழுப்பல் நியாயம் கூறப்பட்டதாம்.

இதைவிட, கைதுசெய்யப்பட்ட நபரின் தகவலை, அந்தப் பிரதேசத்தின் நீதிவானுக்கும், மனித உரிமை குழுவிற்கும் அறிவிக்க வேண்டும்.

ஆனால், ஏரோதின் கொடுங்கோல் நீதிதான் தொடருகிறது!

ஈ. பி. டி. பிக்கு பதிலாக

# சிதுவையில் 200 பேருக்கு முகாம் அமைத்து அரசு உதவி

[கொழும்பு]

வவுனியா மற்றும் கொழும்புப் பகுதிகளில் இயங்கி வரும் தமிழ்க் குழுவொன்றின் ஆதரவாளர்கள் இருநூறு பேருக்கு சீதுவைப் பகுதியில் முகாம் அமைத்துக் கொடுக்கப்பட்டு சகல வசதிகளும் வழங்கப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சீதுவையிலுள்ள இக்குழுவினர்களே கொழும்பில் வெள்ளை வான்களில் திரிந்து ஆட்களைக் கடத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருபவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பிலுள்ள தமிழ்க் குழுவிலிருந்து பிரிந்து சென்று இந்திய அகதி முகாமிலிருந்த இவர்களை சிறிலங்கா அரச உளவுப்படைகள் தேடி அழைத்து வந்து தமக்கு உதவியாக செயற்பட வைத்துள்ளனர் என்றும் தெரியவருகிறது.

சீதுவையில் யாரும் நெருங்க முடியாத அளவுக்கு இவர்களுக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஈ. பி. டி. பிக்கு பதிலாக வளர்க்கப்படும் கோஷ்டி இது என்றும் பிரேமதாசாவின் மரணத்தின்பின் ஈ. பி. டி. பி. சற்று நிதானத்துடனும் ஜாக்கிரதையாகவும் செயற்படுகின்றதாகவும் இதற்கு ஈடாக புதியவர்களை அரசாங்கம் அமர்த்தியுள்ளதாம்.

சீதுவையில் இயங்கும் தமிழ்க்குழுவின் தலைவராக செயற்பட்ட உமாபிரகாஸ் என்பவர் அண்மையில் கொழும்பில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டது தெரிந்ததே.

## தஞ்சாவூரில் எட்டாவது உலகத் தமிழ் மாநாடு

(சென்னை)

எட்டாவது உலகத்தமிழ் மாநாடு தஞ்சாவூரில் நடைபெறவுள்ளது தமிழக அரசின் ஆதரவில் அடுத்த வருடம் ஜனவரி மாதத்தில் ஐந்து நாட்கள் இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் இம் மாநாட்டிற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழக முதல்வர் ஜெயலலிதா தலைமையில் இதற்கென விசேட குழுவொன்றும் மேலும் மாநில அமைச்சர்கள் மட்டத்தில் 13 குழுக்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இம்மாநாட்டில் உள்நாட்டு வெளிநாட்டு அறிஞர்கள் பலரும் கலந்து கொள்வார்கள். (வ)

பண்டிதர்குடியிருப்பில்

### பாம்புகள் தொல்லை

(ஆனைப்பந்தி)

கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் நச்சுப்பாம்புகளின் தொல்லை அதிகரித்துள்ளது. அண்மையில் பெய்த கடும் மழையினால் ஏற்பட்ட பெருவெள்ளத்தை அடுத்து மக்கள் வெளியேறிய குடிசைகளில் குடியேறி பெருகியுள்ள இப்பாம்புகளினால் இதுவரை பல குடியிருப்பு வாசிகள் தீண்டப்பட்டுள்ளனர்.

சில தினங்களுக்கு முன்னரும் இளம் குடும்பப் பெண்ணொருவர் பாம்பினால் தீண்டப்பட்டு ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (101ரி)

# "போராளிகளை வழிநடத்த இசைக்கு பெரும் பங்குண்டு"

## புதுவை இரத்தினதுரை உரை

(யாழ்ப்பாணம்)

இந்த மண்ணில் பிறந்த ஒரேயொரு காரணத்துக்காக இங்குள்ள மரங்களெல்லாம் துப்பாக்கிச் சூட்டுக்கும், விமானக்குண்டு வீச்சுக்கும் ஆளாகவேண்டியுள்ளது. இந்த மண்ணில் பிறந்த காரணத்துக்காக நாம் வளர்க்கும் மாடுகள் எல்லாம் பயங்கரமான தாக்குதல்களில் அகப்பட்டு பலியாகின்றன. இந்த மண் விபரிக்க முடியாத வேதனையுடன் பெரிய பாரத்தைச் சுமந்து நிற்கின்றது.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற "விடிவின் ராகங்கள்" பாடல் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழாவில் வெளியீட்டுரை நிகழ்த்திய விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு. இ. கரிகாலன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:- தமிழுக்கும் இசைக்கும் நெருங்கிய உறவு உண்டு. எமது மக்கள் தமது தேவைகள் எதுவாக இருந்தாலும் அந்தந்த தேவைகளுக்கு ஏற்றவாறு இசையமைப்பை, இசைக்கருவிகளை மாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

எமது போராளிகளை வழி நடத்துவதற்கு இசையும் ஒரு முக்கிய பங்கினை வகிக்கிறது. போராளிகள் போராட்டத்தில் மட்டுமல்லாது கலைகளிலும் வல்லுநர்களாக திகழ்கிறார்கள். இவர்களுக்கு எமது மக்களும் சகல ஒத்துழைப்புகளையும் நல்கவேண்டும். இந்தப் போராட்டம் விரைவில் முடிவு பெறும். இதில் நாம் வெற்றி பெறுவோம். இதுமுற்றுப்பெறும் வேளையில் எமது இசைக்கருவிகளுடன் இணைந்து தான் நாம் எல்லோரும் செயல்படப்போகிறோம் என்றும் அவர் தெரிவித்தார்.

விழா ஆரம்பத்தில் மங்கள விளக்கை விடுதலைப் புலிகள் மகளிர் படையணித் தளபதி செல்வி விதுஷா, நிதர்சனம் பொறுப்பாளர் திரு. ஜான் முகிலோர் ஏற்றி வைத்தனர்.

விடுதலைப் புலிகள் மூத்த தளபதி திரு. பானு இந்த ஒலி நாடாவின் முதல் பிரதியை வெளியிட்டு வைக்க, யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி பெற்றுக்கொண்டார்.

யாழ். மாவட்ட சிறப்புத் தளபதி திரு. செல்வராசா கலைஞர்களைக் கௌரவித்தார். இதனைத் தொடர்ந்து கவிஞர் இ. முருகையன், திருமதி சிதம்பரநாதன், பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் மதிப்பீட்டுரை வழங்கினர்கள். -162-ரி

மாலைவனத்தை சோலைவனமாக்கும் பசுமை நிறைந்த மரம் நடுவோம்

பதில் பிரதிக் கல்விப் பணிப்பாளர்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கல்விக் கோட்டப் பணிப்பாளர் திரு. எஸ். செல்லத்துரை, சேவையில் இளைப்பாறுவதையடுத்து திரு. வி. செல்வரத்தினம் பதில் பிரதிக் கல்விப்பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். -52

## இன்று

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை ஸ்ரீமுத்துமாரி அம்பாள் வருடாந்த குளிர்த்தி உற்சவம் இன்று திங்கட்கிழமை இரவு ஆறு மணிக்கு ஆரம்பமாகும். நாளை 1ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை விசேட அபிஷேகம் பூசை ஆராதனை நடைபெறும்.

(154)

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து மைதானச் சந்தியில் அமைந்துள்ள மெய்கண்டதேவர் ஆதீனச் செபமண்டபத்தில் இன்று திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு சண்டேசுர நாயனார் குரு பூசை வழிபாடு நிகழும்.

தேர்தல் பிரசாரம்:

## அரசுக்கு முன்னுரிமை

(கொழும்பு)

தென்மாகாண சபையின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களை நடத்துவது தொடர்பான விதிமுறைகளை தென்மாகாண பிரதிப்பொலிஸ் மா அதிபர் லோரன்ஸ் தெரிவித்துள்ளார்.

சாதாரண தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் இரவு 10மணிக்குள் முடிவடைய வேண்டும். ஆனால் அமைச்சரவை சேர்ந்த அமைச்சர்கள் கலந்து கொள்ளும் கூட்டங்களுக்கு இந்த நேரக் கட்டுப்பாடு செல்லுபடியாகாது என தெரிவித்துள்ளார்.

அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் பிரசாரக் கூட்டங்களை நடத்துவதற்கு அரசாங்கம் இதன் மூலம் பாரபட்சம் காட்டி வருவதாக எதிர்க்கட்சி வட்டாரங்கள் கண்டனக் குரல் எழுப்பியுள்ளன. (இ)

## இராசிபலன்

31 - 1 - 1994

திங்கட்கிழமை

(தமிழுக்கு தை 18)

சதுர்த்தி: பிற்பகல் 12-55 வரை, உத்தரம்: முன்னிரவு 8-38 வரை, சித்தயோகம், இராகுகாலம்: காலை 8-06 முதல் 9-36 வரை, சுபநேரம்: நண்பகல் 12-36 முதல் 2-6 வரை.

மேடம்: காரியசித்தி, தானியலாபம், போசன சுகம்.

இடபம்: நேத்திர ரோகம், தொழில் மத்திமம், யோசனை.

மிதுனம்: வெளியில் அலைச்சல், கடன்பகை, குடும்பக் கவலை.

கடகம்: மனச்சந்தோஷம், பிறர் உதவி, உயர்ந்த நிலை.

சிம்மம்: பயண தாமதம், துவேஷம், காரியதடை.

கன்னி: வழி நடத்தல், கல்விஞானம், பாராட்டு.

துலாம்: துர்வார்த்தை, புத்திரர் கவலை, மனச்சுமை.

விருச்சிகம்: புதிய சிந்தனை, அதிகாரிகள் உதவி, பண வரவு.

தனுசு: தெய்வீக வழிபாடு, சகோதர உதவி, விருந்துண்ணல்.

மகரம்: தொழில் பாதிப்பு, அதிகவேலைப்பளு, தடுமாற்றம்.

கும்பம்: மாதா சிந்தனை, காரிய விரோதம், எதிர்பாராத செலவு.

மீனம்: பெண் உபதேசம், வாக்கு வசீகரம், வெகுமதி.

— ஜோஸ்யர்

